**மாந்தை கிழக்கு பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 13 யூலை 2020 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 05 அக்டோபர் 2020 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள் அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுளள் விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் மாந்தைகிழக்கு பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டுஉத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போதும் இவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகளினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் வெளிப்படுத்தப்படும் என்பதனை அறியத்தருகின்றேன். |

**ஆ) பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பொன்னகர் சந்தைக கடைத்தொகுதியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய் வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டுவரப் பட்டிருக்க வில்லையாதலால் நிலமும் கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வரலாற்றுக் கிரயம் / மதிப்பிடப்பட்ட பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டு கணக்கு அறிக்கையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கூட்டுமொத்தம் ரூபா 369,029 பெறுமதியான ஐந்து அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டமையினால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 369,029 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |
| (iii) | கூட்டுமொத்தம் ரூபா 239,000 பெறுமதியான ஒன்பது இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப் பட்டிருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 239,000 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |
| (iv) | கூட்டுமொத்தம் ரூபா 931,000 பெறுமதியான பதினொரு பொறித் தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 931,000 ஆல்அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை பொறித் தொகுதி மற்றும் இயந்திரஉபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப் பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |
| (v) | கூட்டுமொத்தம் ரூபா 959,750 பெறுமதியான முப்பத்தேழு கணினிமற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் | சீர்செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 959,750 ஆல் அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| | கூட்டுமொத்தம் ரூபா 236,470 பெறுமதியான ஆறு தளபாடங்களும் பொருத்துக்களும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அலுவலக உபகரணங்களாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 236,470 ஆல்அலுவலக உபகரணங்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர்செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |
| (vii) | நேர்முன்னைய ஆண்டில் சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மேலதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 393,192 இனை மீளாய்வாண்டில் சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருக்காது ஏனைய பொறுப்புக்களின் வரவு மீதியாகக் காட்டப்பட்டமையினால் சில்லறைக் கடனாளிகள் கணக்கு மீதி ரூபா 393,192 ஆல் நிதிக்கூற்றுக்களில் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது. | உரியவாறு சீராக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இத்தவறு இடம்பெறாது என்பதனை அறியத் தருகின்றேன். |
| (viii) | நேர்முன்னைய ஆண்டில் சில்லறைக் கடனாளிகள் கணக்கிற்கு மேலதிகமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டுமொத்தம் ரூபா 21,641 மீளாய்வாண்டில் திரண்டநிதிக்கு மாற்றப்பட்டிருக்காது நிதிக்கூற்றுக்களில் நிலுவையாகவுள்ள ஏனைய அரசிறைகளிலிருந்து கழித்துக் காட்டப்பட்டமையினால் மீளாய்வாண்டின் நிலுவையாயுள்ள அரசிறைகள் ரூபா 21,641 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது. | சபையின் திரண்ட நிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நாட்குறிப்பினூடாக சீர் செய்யப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ix) | சபைக்கு கூட்டுமொத்தம் ரூபா 7,290,725 பெறுமதியில் மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த பிக்கப், உழவு இயந்திரம் மற்றும் வடக்கு மாகாண பிரதம செயலாளரினால் ரூபா 1,020,000 பெறுமதியில் வழங்கப்பட்டிருந்த உழவு இயந்திரம் என்பன சபைக் குரித்தற்றவையாகக் காணப்பட்டன. எவ்வாறாயினும் அவற்றின் பெறுமதிகள் பிரதேச சபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டுள்ளமையினால் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,310,725 ஆல் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | சபைக்குரித்தானவையாக உடமைமாற்றம் செய்யப்படுவதற்கு அன்றேல் அவற்றின் பெறுமதிகளை சபையின் நிதிக் கூற்றுக்களிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | டபிள் கப் பிக்கப் WP PF 7726 லீசிங் முடிந்த பின்னர் உரிமை மாற்றம் செய்யப்படும் என்பதால் அவ் வாகனப்பெறுமதி இறுதிக் கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. உரிமைமாற்ற விண்ணப்பம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையால் எமது சொத்தாக கணிக்கப்பட்டுள்ளது. உழவு இயந்திரம் EP RB 9385 உரிமை மாற்றத்திற்காக ஒப்படைத்து உள்ளமையால் அவ் வாகனம் எமது சொத்தாக நிதிக்கூற்றில் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது. |

**(இ). கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 69.29 மில்லியன் பெறுமதியான காணி கட்டடங்கள், கிணறுகள், அரசிறைக் கடனாளிகள் மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளுக்குரிய காணி உறுதிப்பத்திரங்கள், நில அளவை வரைபடங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ்கள், வரலாற்றுக் கிரயத் தாள்கள், வேலைக் கோவைகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் என்பன கணக்காய்விற்குக் கிடைத்திருக்காமையினால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்துமூல ஆவணங்களினைப்பெற்று உரியவாறு கோவைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | காணிகளின் அனுமதிப்பத்திரம் இன்மையால் விலை மதிப்பீடு செய்ய முடியாதுள்ளது. கிடைத்தவுடன் விலை மதிப்பீட்டு திணைக்களம் மூலம் விலை மதிப்பிட்டு கணக்கறிக்கையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். வரலாற்றுக் கிரயத்தாள் பேணுவதற்கு நடவடிக்ககை எடுக்கப்பட்டுள்ளது. வேலைக் கோவைகள் எம்மிடம் உள்ளது அதனை அடிப்படையாக வைத்தே பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட் டுள்ளது.<br><br>பிரதேச செயலகத்திடம் ஆவணங்கள் கிடைத்ததும் சரியான முறையில் பேணப்படும் என்பதனை அறியத் தருகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள் | | | |
| (i) | அத்தியாயம் II இன் பிரிவு 66 | ரூபா 22,662,784 பெறுமதியான ஆறு வகையான வருமான நிலுவைகளினை அறவிட்டுக் கொள்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருமான நிலுவைகளினை அறவிட்டுக் கொள்வதற்கு சபையின் செயராளரால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் அறவிட்டினை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலை வரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | சோலைவரி கணிப்பிடப்படுவதற் குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | சோலை வரி தொடர்பான கணிப்பீட்டிற்கு தொடர் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| (iii) | அத்தியாயம் V இன் பிரிவு 140 | ஆறு ஒப்பந்தகாரர்களுக்கு மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,181,804 முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப் பட்டிருக்காத 12 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப் பட்டிருந்தன. | ஒப்பந்த வேலைகள் நிறைவேற்றப் பட்டிருக்காத நிலையில் ஒப்பந்த தாரர்களுக்கு முற்பணம் செலுத்தப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| (i) | இலக்கம் 110 | நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | நாளதுவரைப்படுத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுகின்றது. அது முழுமைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | இலக்கம் 214 | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டி ருக்கவில்லை. | நாளதுவரைப்படுத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பேணப்படுகின்றது. அது முழுமைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | இலக்கம் 395 | மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தில் வங்கியில் இனங்காணப்பட்டிராத நேரடி வைப்புக்கள் ரூபா 198,487 தொடர்பில் நடவடிக்கையெடுப்பதற்கு 28 பெப்ரவரி 2020 வரை சபை தவறியிருந்தது. | மாதாந்தம் உரியவாறு இனங்கண்டு பதிவுக்குட் படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது இணங்கானப்பட்டு வருமானமாக மாற்றப்பட்டுள்ளது. |
| (iv) | இலக்கம் 454(2) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டினை பராமரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (v) | இலக்கம் 571 | எட்டு ஒப்பந்தகாரர்களினால் மேற்கொள்ள ப்பட்டிருந்த பதினொரு ஒப்பந்த வேலைகளுக்குரிய பிடிபண வைப்புக்கள், மூன்று மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது கடந்த 01 தொடக்கம் 02 ஆண்டுகளாக ரூபா 594,294 பொது வைப்புக்கள் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | உரிய காலத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பிடிபண வைப்புகளை மீளப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டு ள்ளது. அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>கேள்வி வைப்புக்கள் தொடர்பில் மீளப்பெற்றுக்கொள்ளுமா று அறிவிக்கப்பட் டுள்ளது. ஆனால் அவர்களிடமிருந்து கோரிக்கைகள் கிடைக்கப்பெறவில்லை. எனவே அதனை வருமானமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (vi) | இலக்கம் 845(1) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை | உரியவாறு பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பேண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (vii) | இலக்கம் 891(1) | பிணைகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | உரியவாறு பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தற்போது பேணப்படுகின்றது. |
| **(இ)** | **அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவை** | | | |
| (i) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரிவு 2.11.2 | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | பதிவேட்டினை தொடர்ச்சியாக பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் பிரிவு 5.2.1 | கேள்வி கோரல் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | தொடர்ச்சியாக பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தற்போது பேணப்பட்டு வருகின்றது. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,588,769 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,371,183 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வாடகைகள் | 887,000 | 728,798 | 640,348 | 225,612 | 779,0000 | 823,045 | 449,118 | 305,442 |
| (ii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 272,000 | 479,765 | 479,765 | – | 141,000 | 434,634 | 434,634 | – |
| (iii) | ஏனைய வருமானம் | 8,796,500 | 22,092,399 | 8,041,286 | 22,437,261 | 8,712,500 | 14,717,862 | 5,311,389 | 9,474,958 |
| | மொத்தம் | **9,955,500** | **23,300,962** | **9,161,399** | **22,662,873** | **9,632,500** | **15,975,541** | **6,195,141** | **9,780,400** |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2019 இலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வருமான நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 22,662,873 இனை 01 சனவரி 2019 இலிருந்த வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,780,400 மீளாய்வாண்டிற்கான மொத்த பட்டியலிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 23,300,962 மற்றும் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் என்பவற்றுடன் தொடர்புபடுத்திப் பரீட்சித்து அதன் உண்மையானதும் செம்மையானதுமான தன்மையினைக் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ளமுடியாதிருந்தது. | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாதுள்ள வருமான நிலுவைகளினை இணக்கம் காட்டக்கூடியதாக கணக்குகள் தயாரிக்கப்படுவதுடன் நிதிக்கூற்றுக்களிற்கும் உரியவாறு கொண்டுவரப்பட்டிருக்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையானது கடை வாடகை, தண்டப் பணம், குத்தகைக் கட்டணங்கள், கனரக வாகன சேவைக் கட்டணங்கள் மற்றும் தண்டப்பணம் போன்றவற்றினை | உரிய காலத்தினுள் சபைக்கு சேர வேண்டிய வருமானங்களினை அறவிட்டுக் கொள்வதற்கும் வருமான நிலுவைகளினை தவிர்த்துக் | நிலுவை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வயது பகுப்பாய்வு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| அறவிட்டுக்கொள்வதில் நலிவான நிலை அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுமொத்த வருமானம் ரூபா 1.40 மில்லியனானது மீளாய்வாண்டிற்குரிய அத்தகைய வருமான நிலுவைகள் ரூபா 14.29 மில்லியனில் 10 சதவீதமாகவும் நேர்முன்னைய ஆண்டுகளிலுமாக அறவிடப்பட வேண்டியதான வருமான நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 24.07 மில்லியனில் 06 சதவீதமாகவும் இருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள வருமான நிலுவைகளின் வயதுப் பகுப்பாய்வு கணக்காய்வுக்கு கிடைத்திருக்கவில்லை. | கொள்வதற்கும் சபையின் செயலாளரினால் விரைந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக விதிகளின் அத்தியாயம் III இனது பிரிவு 32 இன் பிரகாரம் சபையினால் கடந்த 10 ஆண்டுகளாக ஆதன வரி மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | ஆதன வரி மதிப்பீட்டுப் பதிவேட்டினை பராமரிப்பதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுகிறது. |

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 17 ஏப்ரல் 2009 ஆம் திகதிய 1597/8 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த தனியார் நிறுவனமொன்றின் 03 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், | வருமான நிலுவைகளைக் கணிப்பீடு செய்து அறவிடுவதற்கும் வருடாந்தம் அக் கட்டணங்களினை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கும் அவற்றினை சபையின் | தொலைத் தொடர்பு கோபுரங்கள் மூன்றும் இராணுவ முகாமுக்குள் அமைக்கப்பட் டுள்ளது. இவ் விடயங்களுக்கு 03 காணி உரிமையாளர்களிடமிருந்து அனுமதி தேவைப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச்சான்றிதழின் வழங்குகைகள் மற்றும் மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்கள் முழுமையாக அறவீடு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டுமொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு கடந்த ஐந்து ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவருவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ஆனால் தற்போது இக்காணிகள் இராணுவத்தினருக்கு உரித்தாக்கப்பட் டுள்ளது. இதனால் எமது தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க 1987ம் ஆண்டு 15ம் இலக்க கட்டணச் சட்டத்தின் பிரிவு 17.2 இன் பிரகாரம் தடையாக உள்ளது. இருந்தும் உரிய நிறுவனங்களுக்கு உரிய கட்டணத்தை செலுத்துமாறு எம்மால் கோரிக்கை விடுத்தும் அவர்களால் செலுத்தப்பட வில்லை. |

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுமொத்தம் ரூபா 21,339,235 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து உரிய காலத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் நடவடிக்கைகள் பயன்மிக்க வகையில் எடுக்கப்படுதல் வேண்டும். | கோரிக்கை விடுத்தும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய அனைத்து வகையான செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று முறையாக தயாரிக்கப்பட்டிருக் கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரித்து அதற்கேற்ப செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையின் எல்லைப்பரப்பிலிருந்து அகற்றப்படுகின்ற குப்பை கூளங்களை எரித்தல் மற்றும் புதைத்தல் செயற்பாடுகள் மட்டுமே சபையால் மேற்கொள்ளப்படுகின்றதேயன்றி கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்றிட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தொடர்ந்தும் நலிவடைந்திருந்தன. | கொம்பொஸ்ட் மற்றும் மீள்சுழற்சி செயற்திட்டங்களைக் கொண்ட திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் இத் திட்டத்தினை மேற்கொள்ள முனைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன்முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கடந்த இரு ஆண்டுகளாக உருவாக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டு அவற்றின் வருடாந்த செயன் முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கான குறிகாட்டிகளினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுதல் வேண்டும். | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ)சபையானது பாதீட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி வேலைகளினை மேற்கொள்ளாது கூட்டுமொத்தம் ரூபா 23.2 மில்லியன் பெறுமதியான நிதியை கடந்த 01 தொடக்கம் 06 ஆண்டுகளாக வங்கியொன்றின் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | பொதுமக்களுக்குப் பயனளிக்கக் கூடிய செயற்றிட்டங்களில் அவற்றினை முதலீடு செய்வதற்கும் பொது நன்மையினை ஏற்படுத்தக்கூடிய வகையில் அந்நிதியினை பயன்படுத்தி வருமான மீட்டலை அதிகரித்துக் கொள்வதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எமது சபையின் செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல நிதி தேவை என்பதால், வங்கியின் மூலம் கிடைக்கும் நிலையான வைப்புத் தொகைக்கான வட்டி பெரும் தொகை கிடைப்பதால் இத்தொகை எமது வருமானமாக உள்ளது. |
| (ஆ)சபைக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த 134 எண்ணிக்கையான தளபாட இயந்திரம் மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அத்தகைய உபகரணங்கள் கிடைக்கப்பெற்ற திகதி, அவற்றின் பயன்படு பொருளாதார ஆயுட்காலம் என்பன கடந்த ஒரு வருட காலமாக கணக்காய்விற்கு அறியக்கிடைத்திருக்கவில்லை. | அரச விலை மதிப்பீட்டாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட விலைமதிப்பீட்டாளரின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்படுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இப்பொருட்கள் அனைத்தும் நன்கொடையாக கிடைக்கப் பெற்றன. அவை உள்ளூராட்சி அமைச்சு, நீர்பாசன திணைக்களம் என்பவற்றில் இருந்து பாவிக்கப்பட்ட நிலையில் எமக்கு வழங்கப்பட்டவையாகும் என்பதால் அதன் பெறுமதி சேர்க்கப்படவில்லை. வெகுவிரைவில் பெறுமதி கணிப்பிடப்பட்டு உள்வாங்கப்படும் என்பதனை உறுதிப்படுத்துகின்றேன். |
| (இ) மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 20 மில்லியன் பெறுமதியில் மதிப்பிடப்பட்டிருந்த 11 உள்ளக வீதி புனரமைப்பு வேலைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன. | சபையின் வருடாந்த பாதீட்டு விடயங்களைசெயற்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

#### (அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் தொழில்நுட்ப உத்தியோகத்தர், வருமான பரிசோதகர் போன்றவற்றின் 50 சதவீதமான வெற்றிடங்கள் காணப்படுவதனால் | பதவியணியினரை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தவாறு பரவலாக்கல் மூலம் பெற்றுக் | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| முறையே அபிவிருத்தி வேலைச் செயற்திட்டங்கள் மற்றும் வருமான அறவீடுகளினை செவ்வனே செயற்படுத்த முடியாதுள்ளமை கணக்காய்வுக்கு அறியக் கொடுக்கப்பட்டிருந்தது. | கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பல்வேறுபட்ட புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்கு நான்கு சமுதாய அடிப்படையிலான நிறுவனங்கள் மற்றும் இரு ஒப்பந்தகாரர்களுக்கு மீளாய்வாண்டின் நொவெம்பர், திசெம்பர் மாதங்களில் கூட்டுமொத்தம் ரூபா 5.18 மில்லியன் சபை நிதியிலிருந்து முற்பணமாகச் செலுத்தப்பட்டு அவை நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காத 12 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | சபைநிதியிலிருந்து மேற்கொள்ளப்படாத வேலைகளுக்கு சபைநிதியிலிருந்து முற்பணமாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். | தற்பொழுது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குரித்தான ஆதனங்கள், பொறித்தொகுதி இயந்திரங்கள் மற்றும் தளபாட உபகரணங்கள், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் என்பவற்றினை 28 யூன் 2017 ஆம் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக சொத்து முகாமைத்துவ அமைச்சின் 01/2017 ஆம் இலக்க சுற்றறிக்கைக்கமைவாக முறையே நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனி உதிரிப்பாகங்கள் பதிவேடு என்பவற்றில் பதிவுக்குட்படுத்தப்பட்டிருக்க நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பதிவேடுகளினை உரியவாறு பராமரித்து அவற்றினை நாளதுவரைப்படுத்துவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். | தற்போது பேணப்பட்டு வருகின்றது. |

### 3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினதும் நேர்முன்னைய ஆண்டினதும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபையின் அறிக்கைகளுக்கமைவாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 757 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின் தொடர் நடவடிக்கைகள் நாளதுவரை நலிவடைந்திருந்தன. | வருடாந்தம் பின் தொடர் நடவடிக்கைகள் நிறைவேற்றப்படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | தற்போது நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. |

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் சபைக்குரிய பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத்திட்டம், மற்றும் பெறுகைக்கால அட்டவணை என்பன தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | இனிவரும் காலங்களில் பெறுகைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் மீளாய்வாண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் சரியான பொறிமுறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டிருக்காமையால் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட செலவினம், உண்மைச்செலவினம் என்பவற்றிற்கிடையே 7 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையிலான சாதகமானதுமானதும் பாதகமானதுமான வேறுபாடுகளும் ஐந்து வகையான மதிப்பிடப்பட்ட | சபையானது பொருத்தமான அடிப்படைகளைக் கருத்திலெடுத்து நடைமுறைக்குச் சாத்தியமான வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து பொதுமக்களின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்து அவற்றினை வினையாற்றலுடன் செயற்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை எடுத்தல் வேண்டும். | சபையானது பின் தங்கிய பிரதேசம் என்பதால் வருமான மூலங்கள் குறைவாகவே காணப்படுகிறது. இதனால் வருமான சேகரிப்பிலும் சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. கிடைக்கப்பெறும் வருமானத்திலேயே எமது செலவுகளும் மேற்கொள்ளப்படுகிறது. |

| | | |
|---|---|---|
| வருமானம், உண்மை வருமானம் என்பவற்றிற்கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 17 சதவீதம் தொடக்கம் 492 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | | இதனால் பாதீட்டில் எதிர்பார்த்த இலக்க அடைய முடியாத நிலை காணப்படுகிறது. |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமென உள்ளகக்கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டுள்ள போதிலும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் என்பன கடந்த இரு ஆண்டுகளாக கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை. | உள்ளகக்கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளக கணக்காய்வாளர் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆளனி பற்றாக்குறை தொடர்திருப்பதால் தனித்து செயற்பட முடியாதுள்ளது. |